## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி
## அசல் வழக்கு எண்.63/2012

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் நாள் புதன்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு.T. சோழவேந்தன் B.A.,B.L.., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிராமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி : | 14.06.2023 | தந்தை பெயர் | சிவசிதம்பரம் |
| பெயர் : | ராமகிருஷ்ணன்<br>(PW- 2 chief ) | தாலுக்கா : | சீர்காழி |
| கிராமம் : | கடவாசல் | சமயம் : | |
| சாதி : | | வயது : | 60/2023 |
| தொழில் : | | | |

**<u>முதல் விசாரணை : 14.06.2023.</u>**

நான் இந்த வழக்கில் 2-ம் வாதி ஆவேன். 1-ம் வாதி இறந்துவிட்டார். எனது சத்திய பிரமான வாக்குமுலத்தை நிருபன வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் நிருபண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

08.01.1940-ல் கோவிந்தசாமி படையாட்சிக்கு தங்கவேல்செட்டி வகையாறா எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 20.11.1952 தேதியிட்ட கோவிந்தசாமி படையாசியும் சிவசிதம்பரமும் ஏற்படுத்திக்கொண்ட குத்தகை அடைப்பு சீட்டு அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (1-ம் பிரதிவாதி தரப்பில் போதிய முத்திரை தாளிளல் எழுதப்படவில்லை என்றும் பதிவு செய்யப்படவில்லை என்றும் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணையானது தீர்ப்பின்போது பரிசீலைக்கப்படும்) 1354-ம் ஆண்டு பசலிக்கான கிஸ்திரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1356-ம் ஆண்டு பசலிக்கான கிஸ்திரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** 1357-ம் ஆண்டு பசலிக்கான கிஸ்திரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1359-ம் ஆண்டு பசலிக்கான கிஸ்திரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 06.08.2004-ம் ஆண்டு செலுத்திய கிஸ்திரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்கள் சேதம் ஏற்படுள்ளதாலும் முத்திரை இல்லை என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணை தீர்ப்பின்போது பரிசீலிக்கப்படும்.) 17.09.2010 தேதிய சிவா என்பவரின் இறப்பு சான்றின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 09.06.2010 1-ம் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 14.12.2010-ல் அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 20.12.2010-ல். பிரதிவாதிக்கு அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பின் சார்வு நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 22.12.2010-ல் 2-ம் பிரதிவாதி அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பின் சார்வு நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் வழக்கு எண்.208/2011-ன் வழக்குரையின் சார்வு நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 15.09.2010 தேதியிட்ட சிவசிதம்பரம் என்பவரின் இறப்பு சான்றின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணங்களை ஏற்று தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிது.